# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

## பன்னாட்டுக் கருத்தரங்கு

தொகுதி - 1



தமிழ் உயராய்வு மையம்

பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)

மதுரை - 18

# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

(பன்னாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு)

ISBN: 978-93-87865-06-8

தொகுதி - 1

( 28.9.2018, 29.9.2018 ஆகிய இரு நாட்களில் நடைபெற்ற
பன்னாட்டுக் கருத்தரங்கில் தமிழ்த்துறையினரால் வெளியிடப்பட்டது )

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ஆ. பாப்பி கமலா பாய், தமிழ்த்துறைத் தலைவர்

முனைவர் சி. அருள் மைக்கேல் செல்வி

முனைவர் இரா. டயானா கிறிஸ்டி

முனைவர் இரா. ஏஞ்சல்

திருமதி பா. திவ்யா

திருமதி டே. ஆனி மரிய ஜான்சி

வெளியீடு

தமிழ் உயராய்வு மையம்

பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)

மதுரை - 18

# பொருளடக்கம்


| வ. எண். | தலைப்பு | பெயர் | பக்கம் எண் |
| --- | --- | --- | --- |
| 1. | திருவிவிலியச் சமத்துவம் | முனைவர் அஞ்சலி அன்னாபாய் இராஜசேகரன் | 1 |
| 2. | மனிதம் | திரு.அருள்ராஜ் திலக், அ. | 6 |
| 3. | நீதிமொழியில் அறம் | முனைவர் அலிஸ்ராணி, ப. | 8 |
| 4. | திருவிவிலியம் காட்டும் பெண்ணியச் சிந்தனை | திருமதி. அனிதா ஜூடிட், ஞா. | 11 |
| 5. | திருவிவிலியத்தில் பெண்கள் சார்ந்த மதிப்புகள் | முனைவர் அன்புராணி, செ. | 14 |
| 6. | "திருப்பாடல்கள்" முன்வைக்கும் இறை மன்றாட்டுகள் | செல்வி ஆனந்தவள்ளி, த. | 18 |
| 7. | சபைநூல் உணர்த்தும் உறவுநலம் | திருமதி. ஆனி மரிய ஜான்சி, டே. | 22 |
| 8. | விவிலியத்தில் மனித நேயச் சிந்தனைகள் | திரு. ஏசுதாஸ், வு. | 25 |
| 9. | மதிப்பீடு - மதிப்பு இழப்பு - மீள்மதிப்பீடு | முனைவர் ஏஞ்சல், இரா. | 27 |
| 10. | அன்பினால் இணைக்கப்பட்ட சகோதரத்துவம் | முனைவர் ஐவி ஜெனோ, சு. | 30 |
| 11. | திருவிவிலியத்தில் காட்டப்படும் மனித மதிப்பீடுகள் | முனைவர் கலையரசி, ம. | 32 |
| 12. | "லூக்கா நற்செய்தி" உவமைகள் வெளிப்படுத்தும் விழுமியங்கள் | செல்வி கற்பகவள்ளி, மு. | 36 |
| 13. | திருவிவிலியத்தில் மனித நேயம் | முனைவர் காந்திமேரி, எம்.எஸ். | 40 |
| 14. | கிறித்தவம் காட்டும் மனித மதிப்பீடுகள் | திரு. கிறிஸ்டியன் ஹீலர், தா. | 43 |
| 15. | இறைவேண்டலும் இனிய வாழ்வும் | திருமதி. சகாய ஹில்டா மேரி, டே | 46 |
| 16. | திருவிவிலியம் காட்டும் குடும்பம் குறித்த கட்டமைப்பு | முனைவர் சாந்தி, ப. | 49 |
| 17. | விவிலியத்தில் துகிலியலும் அது சார்ந்த மக்கள் வாழ்க்கை முறைகளும் | முனைவர் சாமுவேல் வெஸ்லி, தே. | 52 |
| 18. | திருவிவிலியத்தில் பெண்கள் (ருத்து) | திருமதி. சிவகாமி, ம. | 58 |
| 19. | புதிய ஏற்பாட்டில் வாழ்வியல் நெறிகள் | முனைவர் சிவகாமி, ஆ. | 60 |
| 20. | விவிலியம் காட்டும் வாழ்வியல் | முனைவர் சுப்புலெட்சுமி, கோ. | 63 |
| 21. | முதிர்வயது - மனிதனின் கீழ்ப்படிதலும் கடவுளின் ஆசீர்வாதமும் | திருமதி சோபியா அடைக்கல மேரி,வ. | 65 |
| 22. | ஆதியாகமம் வழி கிறிஸ்தவமும் கீழ்ப்படிதலும் | முனைவர் டயானா கிறிஸ்டி, இரா. | 68 |
| 23. | திருவிவிலியத்தில் மனிதநேயம் | அருட்பணி முனைவர் டென்சன் எக்டர், இரா.செ. | 72 |
| 24. | திருவிவிலியத்தில் பெண்கள் நிலை | திரு.தட்சிணாமூர்த்தி, இரா. | 75 |
| 25. | நீதிமொழிகளும் திருக்குறளும் | செல்வி தேன்மொழி, அ. | 78 |
| 26. | திருவிவிலியம் காட்டும் அன்பும் சகோதரத்துவமும் | முனைவர் நிரஞ்சனா தேவி, இரா. | 83 |
| 27. | இயேசு காட்டும் மனித நேயம் | அருள்சகோ. பாத்திமா மேரி, ம. | 85 |
| 28. | திருவிவிலியம் தரும் அமைதிவாழ்வு | முனைவர் பாப்பி கமலாபாய், ஆ. | 88 |

# திருவிவிலியத்தில் பெண்கள் சார்ந்த மதிப்புகள்

முனைவர் செ.அன்புராணி,
உதவிப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை – 18.

**முன்னுரை**

விவிலிய வாசிப்பு கடவுள் - மனித சந்திப்பின் தொடர் நிகழ்வாகக் கருதப்படுகிறது. சமயங்கள் நிறைவாழ்வை நோக்கிப் பயணிக்க அறிவுறுத்துகின்றன. 'கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார். கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார் (தொடக்க நூல்: 1:27), 'கிறிஸ்துவுக்குள் ஆண் என்றும், பெண் என்றும் வேறுபாடு இல்லை. கிறிஸ்து இயேசுவில் இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள்'' (கலாத்தியர்: 3:28) என்றும் ஆண் - பெண் ஒருமைப்பாட்டை விவிலியம் எடுத்துரைக்கிறது.

திருவிவிலியம் என்பது கடவுளுக்கும், மனிதருக்கும் இடையேயுள்ள அன்புப் பிணைப்பை, மனிதரின் வரலாற்றில் கடவுளின் இருப்பை, வாழ்வின் நிகழ்வுகளுக்கு மத்தியில் முழுமையைத் தேடும் பயணத்தில் கடவுளின் வழிகாட்டுதலை எடுத்தியம்பும் வரலாறாகும். திருவிவிலியம் குறிப்பிட்ட காலத்திற்குள் எழுதி முடிக்கப்பட்டதல்ல. அது பல்வேறு காலச்சூழலில் நிகழ்ந்த நிகழ்வுகளின் தொகுப்பாகும். திருவிவிலியத்தின் முதல் பெண்ணான ஏவாள், மானிட சமூகத்தின் தொடக்கமாக அமைகிறார். ஏவாள் தொடங்கிப் பல பெண்கள் திருவிவிலியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். திருவிவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள, இயேசுவின் மீது நம்பிக்கை கொண்ட சில பெண்களின் பண்பு பற்றிய ஆய்வாகவும், பெண்களின் சமூகநிலை சார்ந்த ஆய்வாகவும் இக்கட்டுரை அமைகிறது.

**மரியாவின் தாழ்ச்சியும் புகழ்ச்சியும்**

வானதூதரால் 'அருள் மிகப் பெற்றவராக' வாழ்த்தப்பெற்றவர் மரியாள். கடவுளின் செயலைக் கேள்விப்பட்டதும் அச்சப்பட்டு, ஆச்சரியப்பட்டுக் கலங்கி நின்றவர் அவர். இந்தக் கலக்கம் மரியாளின் நேர்மைக் குணத்தை விளக்கி நிற்கும் உணர்வு வெளிப்பாடாய்த் தெரிகிறது. வானதூதரால் கூறப்பட்ட அனைத்தும் கடவுளின் செயல் என மரியா உணர்ந்த போது, 'நான் ஆண்டவரின் அடிமை. உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்' என்று தன்னைத் தாழ்த்தி ஆண்டவரது அடிமையாக்கினார். மரியாவின் இத்தகு பணிவாழ்வு அன்பு, தூய்மை, தாழ்ச்சி ஆகிய பண்புகளைச் சமூகத்திற்கு அடையாளப்படுத்துகிறது. இத்தாழ்ச்சியின் காரணமாகவே ஒரு பெண்ணினுடைய உடலைத் தன்னுடைய தங்குமிடமாக மாற்றிக் 'கன்னி வழி மலர்ந்த கற்பகமாய்ப்' பிறந்தார் இயேசு. இறையுரு மனித உருவில் தங்க இத்தகு தாழ்ச்சியே காரணமாய் அமைந்தது.

மரியா எலிசபெத்தைச் சந்திக்கிறார். எலிசபெத்து மரியாவை வாழ்த்துகிறார். உடனே மரியா ஆண்டவரைப் புகழ்ந்து பாடுகிறார். மரியாளின் பாடல் இறைவன் வலியவரைத் தாழ்த்தி, எளியவரை உயர்த்தியதை எடுத்துரைக்கிறது. தாழ்நிலையை உயர்த்தும் கடவுளின் தன்மையையும், வலியோரையும், செருக்குடன் செயல்படுவோரையும் சிதறடிக்கும் இறைவனின் பண்பையும் தமது பாடலில் வெளிப்படுத்தியுள்ளார் மரியாள் (லூக்கா1:46-53). கடவுளது இறைத்திட்டத்தையும், அருளையும் தமது புகழ்ச்சியில் பதிவு செய்துள்ளார் மரியாள்.

**தாய்மையைப் போற்றும் இயேசுவின் பண்பு**

இயேசு இவ்வுலக வாழ்வில் தம் பணியை நிறைவேற்றி சிலுவையில் அறையப்பட்டு நின்றபோது, தன் சகோதரனும் சீடனுமாகிய யோவானை அழைத்து, 'இதோ உன் தாய்' (யோவான் 19:27) என்று தன் பொறுப்பைச் சகோதரனின் மீது இறக்கி வைக்கிறார். இவ்வுலகில் பிறக்கும் ஒவ்வோர் ஆண்மகனும் தாயை மதித்துப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்பதை இயேசு தம் வாழ்வின் மூலம் உணர்த்தினார். அதுமட்டுமல்லாது தன்னுடைய போதனைப்பகுதியில் 'விண்ணுலகத்திலிருக்கிற இறைவனின் விருப்பப்படி வாழ்ந்து வருபவர்கள் அனைவரும் எனது தாயும் சகோதர சகோதரியும் ஆவர்' என்றும் கூறியுள்ளார் (மத்தேயு : 12:50). தனிப்பட்ட வாழ்வில் மரியாவைத் தாயாகவும், பொதுவாழ்வில் தூய உள்ளம்